கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.10/2023 வா.சா.1 பழனிசாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 23.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்கு சொத்தும் பிரதிவாதிகளின் சொத்தும் என் தந்தை கிருஷ்ணசாமிக்கும் 1 ம் பிரதிவாதியின் தந்தை ராமசாமிக்கும் 07-03-1955 அன்று ஏற்பட்ட வா.சா.ஆ. 1 பாக சாசனப்படி பாத்தியப்பட்ட சொத்துகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாக ஆவணத்தில் என் தந்தைக்கும் 1 ம் பிரதிவாதி தந்தைக்கும் ஒரே பங்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 பாக சாசனத்திற்கு நாங்களோ எங்கள் தந்தைகளோ பாகம் பிரித்துள்கொள்ளவில்லை என்றால் சரியல்ல . என் தந்தைக்கும் 1 ம் பிரதிவாதி தந்தைக்கும் இடையே வாய்மொழி பாகப் பிரிவினை ஏற்பட்டது.

2) வாய்மொழி பாகப்பிரிவினையை ஊர்ஜிதம் செய்யும் விதமாக எவ்வித ஏற்பாடும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியை பொறுத்து அவர் தன் மற்ற குடும்ப நபர்களிடம் வா.சா.ஆ. 2 விடுதலை ஆவணம் முதலிய பிற ஆவணங்களும் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

3) வழக்கு சொத்துக்களை பொறுத்து நானும் என் தாயார் 3 ம் பிரதிவாதியும் என் சகோதரர்கள் 4,5 பிரதிவாதிகளும் நாளது தேதி வரை பாகம் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கு பி அட்டவணைச் சொத்து என்ற சொத்தே இல்லை என்றும் அது வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என் வழக்குரை பத்தி 7 ல் க.ச.எண் 77/A 1 என்ற புல எண்ணில் பொது வண்டிப்பாதையும் , கிணறும் உள்ளதாக நான்

கூறியுள்ள நிலையில் எங்கள் கிராமத்தில் அத்தகைய புல எண்ணே கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி பொது கிணறும், பொது வண்டித்தடமும் கிராம வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் என் வழக்குரையில் கூறியுள்ள நிலையில் எங்கள் கிராம வரைபடத்தில் அத்தகைய குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

4) க.ச.77/1A ல் 1ம் பிரதிவாதியின் விவசாய பூமி உள்ளது என்றால் சரிதான். க.ச.77/1A ல் தனி கிணறு ஒன்று உள்ளது என்றால் சரியல்ல. கிணறு க.ச.77/1D ல் உள்ளது. க.ச.77/1 D ல் உள்ள கிணறு மேற்படி வாய்மொழி பாகபிரிவினைக்கு பிறகு வெட்டப்பட்டது என்றால் சரிதான். என் தந்தையும் ,1ம் பிரதிவாதி தந்தையும் சேர்ந்து வெட்டினார்கள். மேற்படி கிணறை என் தந்தையும் சேர்ந்து தான் வெட்டினார் என்பதை காட்டும் விதமாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா மட்டும் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிணறுக்கு அது வெட்டப்பட்ட காலம் முதலே 1 ம் பிரதிவாதியின் தந்தை ராமசாமி பெயரில் தான் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை அதற்கு ஆட்சேபணையின்மை சான்று கொடுத்திருந்தார்.

5) மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் க.ச.எண் 77/1D யிலோ அதற்கு அடுத்து உள்ள க.ச.எண் 77/1A யிலோ என் தந்தைக்கு எந்த விவசாய பூமி ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். என் தந்தை மின் வாரியத்திடம் கொடுத்ததாக சொல்லும் ஆட்சேபணையின்மை சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனை தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறேன். . என் தந்தை மின் வாரியத்திடம் கொடுத்ததாக சொல்லும் ஆட்சேபணையின்மை சான்று கொடுக்க தேவை ஏற்படவில்லை என்றும் அதனால் அவர் அதை கொடுக்கவில்லை என்றும் அதனால் தான் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) வழக்கு பி அட்டவணைச் சொத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கிணறோ, வண்டித்தடமோ பூமி அமைப்பில் இல்லை என்றால் சரியல்ல. நான் என் சாட்சியத்தில் க.ச.எண் 77/1D ல் கிணறு இருப்பதாக கூறியிருப்பதும் வழக்கு பி அட்டவணைச் சொத்தில் க.ச.எண் 77/ 1A ல் கிணறு இருப்பதாக கூறிப்பிட்டு இருப்பதும் ஒன்றோடு ஒன்று முரணாக உள்ளது என்றும் அது என் வழக்கிற்கு எதிராக உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

7) நான் கோரியுள்ளவாறு கிணறும், வண்டித்தடமும் , நிலத்தடி குழாயும் இருப்பதாக நான் நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்வாறு கிணறும், வண்டித்தடமும் , நிலத்தடி குழாயும் இருப்பதாக காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற ஆணையர் நியமிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவ்வாறு நடவடிக்கை எடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் நான் கோரியுள்ளவாறு கிணறும், வண்டித்தடமும் , நிலத்தடி குழாயும் பூமி அமைப்பில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8) க.ச.எண் 77/1 D கிணற்றின் மின் இணைப்பு தற்போது 1 ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாளது தேதி வரை ராமசாமி பெயரில் உள்ளது. மேற்படி கிணற்றின் மின் இணைப்பு பல வருடங்களுக்கு முன்பே 1 ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டது என்றும் அது தொடர்பாக நான் நாளது தேதி வரை ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஆட்சேபணை தெரிவித்துள்ளேன். நான் தாக்கல் செய்ததாக சொல்லும் ஆட்சேபணை கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறேன். மேற்படி மின் இணைப்பு 1 ம் பிரதிவாதி பெயருக்கு மாறும் போது நான் ஆட்சேபணை செய்யாததற்கு

அந்த கிணற்றில் எனக்கு பாகம் இல்லாததே காரணம் என்றால் சரியல்ல . நான் ஆட்சேபணை செய்துள்ளேன்.

9) வழக்கு சொத்துக்களை பொறுத்து என் தாயார் 3 ம் பிரதிவாதியும் சகோதரர் 4 ம் பிரதிவாதியும் 1 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஒரு குத்தகை பதிவு செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி குத்தகைக்கு எதிராக நான் கூட்டு பாத்தியஸ்தர் என கோரி நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் என் தாயாரிடம் கேட்டேன். குத்தகை காலத்திற்கு பின் குத்தகையை ரத்து செய்வதாக என் தாயார் என்னிடம் கூறினார். மேற்படி குத்தகையை என் தாயார் ரத்து செய்து விட்டாரா என்றால் இல்லை. ஆனால் குத்தகை காலம் முடிந்துவிட்டது. வயதான காரணத்தினால் என் தாயாரால் பத்திரம் பதிய செல்லமுடியவில்லை. அவ்வாறு எனில் 4 ம் பிரதிவாதி ரத்து செய்து கொடுக்கவில்லையா என்றால் 4 ம் பிரதிவாதிக்கும் உடல்குறைவாக உள்ளது.

10) 3 ம் பிரதிவாதி தன் எதிர் வழக்குரையில் எனது வழக்கு தவறு என கட்சி செய்துள்ளார் என்றால் அவரது எதிர் வழக்குரை பற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்து அது எனக்கு எதிராக இருப்பதால் தான் அதனை படித்து பார்க்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எனக்கு அனுபவமோ , சுவாதீனமோ இல்லை என்றும் நான் சொன்னவாறு வண்டித்தடமோ,கிணறோ இல்லை என்றும் அதனால் நான் வண்டித்தடத்தை பயன்படுத்துவதே 1, 2 பிரதிவாதிகள் தடுத்ததாக சொல்வதே பொய் என்றும் சொன்னால் சரியல்ல. இல்லாத கிணற்றையும், இல்லாத வண்டித்தடத்தையும் புதிதாக உரிமை கொண்டாட பொய்யான தகவல் கண்டு வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு மாதிரி வரைபடம் தவறானது என்றால் சரியல்ல.

**ஒப்பம் /- ( மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி